தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-8-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் வேளாண் அறிவியல் தமிழ் கருத்தரங்க மாநாடு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நாடளாவிய இரண்டாம் வேளாண் அறிவியல் தமிழ் கருத்தரங்க மாநாடு வேளாண்மை எனும் பொருண்மையில் 5-8-2016 அன்று தொடங்குகிறது. நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்து 350 பேராசிரியர்கள், அறிவியல் அறிஞர்கள், ஆராய்ச்சி வளமையர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் தொடங்கி வைத்துப் பேசினார்.

இம்மாநாட்டில் வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம் உள்ளிட்ட பல்வேறு வேளாண்மைத் துறைகளிலும் உள்ள அறிவியல் கூறுகளை உழவர்களும் ஆராய்ச்சியாளர்களும் ஆராய்ச்சி மாணவர்களும் பயன்பெறத்தக்க வகையில் 800 ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தாங்கிய 16 நூல்கள் வெளியிடப்பட்டன.

தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்களின் அறிவியல் தமிழ்ப் பணிகளைப் பாராட்டி எம். எஸ். சுவாமிநாதன் அறிவியல் தமிழ்வேள் விருது வழங்கப்பட்டன. நாகப்பட்டினம் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ) முனைவர் கு. ரத்னகுமார், சென்னை நபார்டு வங்கி முதன்மைப் பொதுமேலாளர் திரு. செ. நாகூர் அலி ஜின்னா ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

நடப்பு கல்வியாண்டு முதல் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்வழி பட்டயக் கல்வி நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதை ஒட்டி 5-8-2016 பிற்பகல் 12 மணிக்கு நடைபெற்றதனியுரையரங்கில் பாரதிதாசன் பல்கலைக்கழக பெரியார் உயராய்வு மைய மேனாள் தனைவர் தமிழறிஞர் சூபராசிரியர் க. நெடுஞ்செழியன் தமிழ்வழிக்கல்வியின் மேன்மையினை ஆராய்ச்சி அடிப்படையில் கருத்துரையாக வழங்கினார்.

இம்மாநாட்டின் முத்தாய்ப்பாய் 5-8-2016 அன்று பிற்பகல் 2 மணிக்கு பேரூர்த் தமிழ்க் கல்லூரி முதல்வர் தவத்திரு. மருதாசல அடிகளார் தலைமையில் தமிழால் இயலும் வேளாண்மை கால்நடையியல் - மீன்வளயியல் என்னும் பொருண்மையில் ஆறு அறிஞர்கள் கொண்டு சான்றோர் முற்றமாக நடைபெறும் பொருண்மையரங்கில் வேளாண் அறிவியலைத் தமிழ்வழி உரைப்பதற்கேற்ற வழிமுறைகள் வகுக்கப்பட்டன. இது இம்மாநாட்டின் மாபெரும் பயனாக அமையும் என்று மாநாட்டை இணைந்து நடத்தும் புதுதில்லி வேளாண் அறிவியல் தமிழ் இயக்க நிறுவனர் மற்றும் தலைவர் முனைவர் மு. முத்தமிழ்ச் செல்வன் உறுதியளித்தார்.

6-5-2016 அன்று பல்கலைக்கழக இயக்குநர் மற்றும் முதல்வர்களின் தலைமையில் நடைபெறும் 16 தொழில்நுட்ப அமர்வுகளில் பேராளர்கள் தங்களது ஆராய்ச்சிக் கட்டுரைகளை வழங்குகிறார்கள். நிறைவு விழா அன்று மாலை 5 மணிக்கு பல்கலைக்கழக அண்ணா அரங்கில் நடைபெறுகிறது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்